# DEPOSITION OF WITNESS

**(Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,ARANTHANGI**

**Calendar**

**Miscellaneous**

**Preliminary Register** **CC.28/2011**

**Sessions**

| | | |
|---|---|---|
| **Deposition of witness for** | அ.சா.1 | **Caste** |
| **NAME** | இளையராஜா | **Calling** |
| **Father's Name** | குப்பமுத்து | **Religion** |
| **Village** | | **Age** |
| **Taluk** | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 22-03-2021

**சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**முதல் விசாரணை**

நான் அறந்தாங்கி கோட்டை 2 ம் வீதியில் வசித்து வருகிறேன். நான் ட்டிரைவராக வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் 1 முதல் 3 எதிரிகளை எனக்குத் தெரியும். கடந்த 2007 ஆம் வருடம் ஒரு நாள் இரவு 8 மணியளவில் நான் கடையில் சாப்பிட்டுவிட்டு அறந்தாங்கி - புதுக்கோட்டை ரோடு வாகைமர பஸ்ஸ்டாப்பில் நான் நின்று கொண்டு இருந்த போது என்னை சுமார் 20 – 25 நபர்கள் கூட்டமாக சேர்ந்து இரும்பு கம்பி , பீர்பாட்டில், ஆகியவற்றால் எனது முகத்தில் தாக்கினார்கள். அதனால் எனக்கு முகத்தில்வலது பக்கம் கண்ணுக்கு கீழ் வாய் வரை ரெத்தக் காயம் ஏற்பட்டது. அந்த நபர்கள் தாக்கியதால் எனது பற்கள் உடைந்து விட்டது. அதன் பின்பு என்னை அங்கிருந்த நபர்கள் காப்பாற்றி அறந்தாங்கி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார்கள். என்னை ஆஜரில் இருக்கும்1 முதல் 3 எதிரிகள் தாக்கவில்லை. என்னை தாக்கிய நபர்கள் யார் என்று எனக்கு இருட்டில் தெரியவில்லை. அந்தக் கூட்டத்தில் இந்த எதிரிகள் இல்லை. நான் மருத்துவமனையில் 10 நாட்கள் வரை இருந்து சிகிச்சை பெற்றேன். நான் சிகிச்சையில்இருந்த போது போலிசார் என்னிடம் புகார் வாக்கு மூலம் பெற்றார்கள்., என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்தப் புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகும். என்னை போலிசார் விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

சம்பவத்தின் போது சுமார் 20 நபர்கள் இருந்து இருப்பார்கள் என்றால் சரிதான். அ.சா.ஆ .1. புகாரில் என்ன எழுதப்பட்டு இருந்தது என்று எனக்குத் தெரியாது. கூட்டமாக என்னை சில நபர்கள் தாக்கியதால் எதிரிகள் தான் என்னை தாக்கியதாக சந்தேகத்தில் தான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். சம்பவத்தின் போது ஆஜர் எதிரிகள் சம்பவ இடத்தில் இல்லையென்று சொன்னால் சரிதான். அவர்கள் அந்த இடத்தில் கிடையாயது.